# <u>சிவகங்கை நகராட்சி</u>
# <u>சாதாரணக்கூட்டம்</u>
# <u>மன்றப்பொருள்கள்</u>
# <u>ஆகஸ்ட் மாதம் :31.08.2020</u>

**1.** சிவகஙகை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் டி எண்.63 எ சி 1606 ஜே.சி.பி வாகனத்தில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு ரூ.1,00,000/—(ஒரு இலட்சம்)செலவின அனுமதிக்கும் அதனை தொடர்ந்து அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும் 06.08.2020 ஆம் தேதி விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

| | | |
|---|---|---|
| 1. | JAYARAJ AUTOMOBILE AGENCY MADURAI | ரூ98428/—மதிப்பீட்டுவிலை விகிதத்தை காட்டிலும் குறைவு |
| 2 | TAMILNADU SPARES HYDRAULICS, Fathima College Madurai | ரூ.140300/—மதிப்பீட்டு விலைவிகித்தை காட்டிலும் அதிகம் |
| 3 | INDIAN SPARES Karaikudi | ரூ.153400/—மதிப்பீட்டு விலைவிகித்தை காட்டிலும் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு..—**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதத்தில் வழஙகியுள்ள ஜெயராஜ் ஆட்டோ மொபைல் மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது பொது சுகாதார பணி என்பதாலும் கொரோனா நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளதாலும் பொதுமக்களின் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலவரின் முன் அனுமதி பெற்று ஜெயராஜ் ஆட்டோ மொபைல் மதுரை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் ..123 அனுமதிக்கப்பட்டது**

**2.** இந்நகராட்சியின் பல்வேறு பிரிவுகளில் நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் பல்வேறு வழக்குகளில் (மாவட்ட நீதிமன்றம் மற்றும் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம்) வக்காலத்து படிவம் தாக்கல் செய்யும் வழக்கிற்கு தேவையான பதிவுரை தயார்செய்து வழக்கை நடத்திச் செல்ல நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 57 நாள் 30.11.2011ம் தேதியின படியும் இவ்வலுவாக செயல்முறை கடித உத்தரவு எண் 3244/2011/அ2 நாள் 01.12.2011ம் தேதியின் படி திரு. S.ராஜசேகரன் பி.எஸ்.சி பி.எல் (பார் கவுன்சில் பதிவு எண் 148/1987) என்பவர் தேர்வு செய்யப்பட்டு இது நாள வரை நகராட்சி எதிராக தொடரப்படும் வழக்குகளில் ஆஜராகி வழக்கை நடத்தி வருகிறார். திரு. S.ராஜசேகரன் என்பவருக்கு நகர்மன்றத்தின் பதவிக்காலம் 2016ம் ஆண்டு முடிந்த பிறகும் தற்போது வரை வழக்குகளில் ஆஜராக எவ்வித பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்படவில்லை. திரு.ம.ரஞ்சித்குமார் பி.எஸ்.சி பி.எல் (பதிவு எண் 559/2001) என்பவர் தனது 31.07.2020ம் தேதிய விண்ணப்பத்தில் தன்னை நகராட்சிவ வழக்குகளில் ஆஜராகயும் நகராட்சி சார்பில் வழக்குகளை நடத்திச் செல்ல தன்னை நகர்மன்ற வழக்கறிஞராக தேர்வு செய்யும் படி விண்ணப்பம் செய்ததின் பேரில் திரு. ம.ரஞ்சித்குமார் பி.எஸ்.சி பி.எல் என்பவரை நகராட்சிவ வழக்கறிஞராக தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு :**

பார்கவுன்சில் வழக்கறிஞர்கள் பட்டியலில் வரிசை எண்156ல் (பதிவு எண் 559/2001) உள்ள வழக்கறிஞர் திரு.ம.ரஞ்சித்குமார் என்பவரை நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் அனைத்து வழக்குகளிலும் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கிற்கு தேவையான வழக்கை நடத்திச் செல்ல திரு.ம.ரஞ்சித்குமார் வழக்கறிஞர் அவர்களை நகராட்சியில் வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 3244/2011/சி1 நாள்: 03.08.2020

**தீர்மான எண் ..124 அனுமதிக்கப்பட்டது**

3. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணி புரியும் திரு. நா.பாண்டி த/பெ. நாச்சிமுத்து என்பவர் உட்பட துப்புரவு பணியாளர்கள் தங்களது பணியாளர் 04.12.2011முதல் பணிவரன் முறை செய்து அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்து நிலுவை ஊதியம் வழங்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்படும் வழக்கு எண் டபிள்யூ(பி) எண் 21155/2018 மற்றும் டபிள்யூ எம்.பி (எம்.டி) எண் 18991/2018 தீர்ப்பு நாள் 18.12.2018ன் படி நகராட்சி சார்பாக வழக்கில் வக்காலத்து படிவம் தாக்கல் செய்யும் வழக்கிற்கு தேவையான பதிவுரை தயார் செய்து வழக்கை நடத்திச் சென்ற வகையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.லாரன்ஸ் அவர்களின் 28.01.2019ம் தேதிய கடிதத்தின் படி வழக்கு கட்டணம் ரூ.10,000/- (பத்தாயிரம்) மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலககுறிப்பு:** வழக்கு கட்டணம் ரூ.10,000/- (பத்தாயிரம்) மட்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.லாரன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**ந.க.எண். 3560/2009/சி1** **நாள்:03.08.2020**

**தீர்மான எண் .. 125 அனுமதிக்கப்பட்டது**

4. சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் மேலாளர் மற்றும் கணக்கர் ஆகியோர்களது இருக்கைகளில் உள்ள கோப்புகள் பதிவேடுகள் மற்றும் வங்கி கணக்கு புத்தகங்கள் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவதற்கு இரு இருக்கைகளிலும் முழுவதுமாக கண்ணாடியிலான கேபின் அமைத்து கொள்வதற்கும் பொறியாளர் அறையில் வண்ணம் அடிப்பதற்கும் மற்றும் பொறியாளர் அறை ஆணையாளர் அறைகளில் உள்ள கதவுகள் பழுதாகியுள்ளதை புதிதாக மாற்றி அமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:**

1 .மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.ஆணையாளர், பொறியாளர்,மேலாளர் மற்றும் கணக்கர் அறைகளின் பாதுகாப்பு கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1397/2020/இ1**

**தீர்மான எண் .. 126 அனுமதிக்கப்பட்டது**

5. பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN63AM2401 டிப்பர் வாகனத்திற்கு தகுதிசான்று பெறுவதற்கு வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்த வேண்டியுள்ளதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி வேகக் கட்டுப்பாட்டு கருவி வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10000/-க்கும், வேக கட்டுப்பாட்டுக் கருவி வாங்க குறுகிய கால விலைப்புள்ளி கோரி அறிவிப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. பொது சுகாதார பணியின் அவசரஅவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்க்கொள்ளலாம்.

**தீர்மான எண் .. 127 அனுமதிக்கப்பட்டது**

6. கொரானா வைரஸ் (covid-19) தொற்று நோயின் தடுப்புப்பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி 15 தற்காலிக சிறப்பு களப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியரின் செந்தர விகித அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.385/- என்ற அடிப்படையில் Southern solid waste management service நிறுவனம் மூலம் தற்காலிகமாக பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொண்டமைக்கு தற்போது ஜுலை 2020 மாதத்திற்கான ஊதியத்தொகை ரூ.1,69,207.50/- செலவினப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே ஜுலை 2020 ஊதியத்தொகைய மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு பதிவுக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் ...128.. அனுமதிக்கப்பட்டது**

7. கொரானா வைரஸ் (covid-19) தொற்று நோயின் தடுப்புப்பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி 15 தற்காலிக சிறப்பு களப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியரின் செந்தர விகித அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.385/- என்ற அடிப்படையில் Southern solid waste management service நிறுவனம் மூலம் தற்காலிகமாக பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது பணிகள் மேற்கொண்டமைக்கு ஜுன் 2020 மாதத்திற்கான ஊதியத்தொகை ரூ.1,64,395/- செலவினப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே ஜுன் 2020 ஊதியத்தொகைய மேற்கண்ட Southern solid waste management service நிறுவனத்திற்கு வழங்கி செலவினமாக வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் .129. அனுமதிக்கப்பட்டது**

8. கொரோனா வைரஸ்(covid-19) தொற்று நோய் தடுப்பு பணிகளில் ஈடுபடும் களப் பணியாளர்களுக்கு பயன்படுத்த தேவையான PPE KIT கவச உடைகள் 500 எண்ணங்கள் பெற பொது சுகாதார பணிகள் அவசர அவசியம் கருதியும், கொரோனா வைரஸ் தொற்று நோய் தாக்கத்தினை கருத்தில் கொண்டும் மேற்கண்ட கவச உடைகள் பெற உத்தேச செலவினம் ரூ.500000/-(ஐந்துஇலட்சம் மட்டும்) தேவைப்படுவதால் மன்றத்தின் அனுமதி பெற வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் ..130 அனுமதிக்கப்பட்டது**

**9.** கொரோனா வைரஸ்(covid-19) தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் களப் பணியாளர்களுக்கு பயன்படுத்த தேவையான முழு உடல் கவசம் (PPE KIT) தேவைப்படுவதால் 500 எண்ணங்கள் கொண்ட முழுஉடல் கவசம் பெற விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்ண்ட நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | அருண் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட். மதுரை | PPE KIT ஒன்றுக்கான விலை ரூ.950/- |
| 2. | சிவமருது கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட். மதுரை. | PPE KIT ஒன்றுக்கான விலை ரூ.890/- |

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப் புள்ளி அளித்த சிவமருது கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் .. 131 அனுமதிக்கப்பட்டது**

**10.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணியினை மேற்கொள்ளவும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் தேவையான கிருமி நாசினி பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூளும் கீழ்க்கண்ட அளவுகளில் கொள்முதல் செய் குறுகிய கால விலைப்புள்ளி அறிவிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.500000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள் விபரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1. | பிளிச்சிங் பவுடர் | 5000 கிலோ |
| 2. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 10000 கிலோ |

**அலுவலகக்குறிப்பு:**

1. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.1524/2018/H1)**

**தீர்மான எண் .132. அனுமதிக்கப்பட்டது**

**11.** கொரானா வைரஸ் தடுப்புப்பணிக்கு தேவைான கிருமிநாசினி பிளிச்சிங் பவுடர் 5000 கிலோ மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்துாள் 10000 கிலோவும் கொள்முதல் செய்ய குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் 24.07.2020 அன்று கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | **கொள்முதல் விலை ரூ.(பிளிச்சிங் பவுடர் 25kg Bag மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்துாள் per kg)** |
|---|---|---|
| 1. | Yogaram Agencies,<br>16,Matha Kovil Main Road,<br>K.Pudur, Madurai. | பிளிச்சிங் பவுடர் (1470+18%GST) |
| | | நீர்த்த சுண்ணாம்புத்துாள் (14.60+5% GST) |
| 2. | Sri Aksaya & CO,<br>128/6, Pandian Nagar 5th st Road ,<br>Kariyapatti,<br>Virudhunagar Dist., | பிளிச்சிங் பவுடர் (1500+18%GST |
| | | நீர்த்த சுண்ணாம்புத்துாள் (15+5% GST) |
| 3. | Jagadhasri Medical & Surgical,<br>2/22, Middle St, Sakkudi (PO),<br>Madurai | பிளிச்சிங் பவுடர் (1377+18%GST |
| | | நீர்த்த சுண்ணாம்புத்துாள் (11.40+5% GST) |

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்த Jagadhasri Medical & Surgical, 2/22, Middle St, Sakkudi (PO),Madurai நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் .. 133 அனுமதிக்கப்பட்டது**

12. கொரோனா வைரஸ்(covid-19) தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் போர்கால அடிப்படையில் பொது சுகாதாரப்பணிகள் அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகள் கழிவுநீர் வாறுகால் மண் அகற்றுதல் பணிகளுக்கு இந்நகராட்சியில் போதுமான அளவு வாகனங்கள் இல்லாத காரணத்தினால் தனியார் டிப்பர் டிராக்டர் TN63AM5301 என்ற வாகனம் மூலம் 01.05.2020 முதல் 31.07.2020 வரை மூன்றுமாதங்கள் தொடர்ச்சியான பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனத்திற்கு டீசல் ஆயில் உட்பட ஒரு நாளைக்கு வாடகை ரூ.4000/- வீதம் மூன்று

மாதங்கள் 92 நாட்களுக்கு ரூ.3,68,000/- (மூன்று லட்சத்து அறுபத்தி எட்டு ஆயிரம் மட்டும்) நகராட்சி சட்டம் 15ன் கீழ் மற்றும் Letter No.74/JS(MA)/Finance (Salaries)/2020 நாள்:01.04.2020ன் படி வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**1. மன்றத்தின் பதிவுக்கு அனுமதிக்கலாம்

**தீர்மான எண் ..134 அனுமதிக்கப்பட்டது**

13. சிவகங்கை நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு சிவகங்கை மாவட்ட ஆட்சியாளரின் உத்தரவின்படி இந்நகராட்சி எல்லை பகுதிகளில் 07.03.2020 அன்று இந்நகராட்சி துாய்மை பணியாளர்கள் மற்றும் மாவட்ட வாரியாக பஞ்சாயத்து துாய்மை காவலர்களைக்கொண்டு சிறப்பு கூட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டடது. அன்றைய தினம் துப்புரவு பணியில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு காலை உணவுகள் வழங்கப்பட்டது. மற்றும் பணிக்குத் தேவையான J.C.B. மற்றும் மண்வெட்டிகள் வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தப்பட்டது. அதற்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டது. செலவினத்தொகை ரூபாய்.16350/- (பதினாறு ஆயிரத்து முன்னுாற்றி ஐம்பது மட்டும்) செலவினமாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் .. 135 அனுமதிக்கப்பட்டது**

14. சிவகங்கை நகராட்சி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத இடங்களில் 90mm PVC குழாய் பதித்தல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை **ரூ.5,00,000/-**கு (ஐந்து லட்சத்திற்கு) இந்நகர்மன்றத்தீர்மானம் தனது **31.07.2019ம்** தேதிய 434ம் எண் தீர்மானத்தில் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்காணும் பணிக்கு 30.08.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழக்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.முருகன், காண்ட்ராக்டர், சிவகங்கை. | **3.20%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம். |
| 2. | திருவாளர்கள். எம்.எம்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், காண்ட்ராக்டர், இராமநாதபுரம். | **0.19%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்ததை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். எம்.எம்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், இராமநாதபுரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியானது குடிநீர் சம்மந்தப்பட்டட அத்தியாவசியப் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திருவாளர்கள். எம்.எம்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், இராமநாதபுரம் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் ..136 அனுமதிக்கப்பட்டது**
**(ந.க.எண்.இ1812/2019)**

15. சிவகங்கை நகராட்சிக்கு சொந்தமான தெற்கு மயானத்தில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடையில் உள்ள உபகரணங்கள் பழுதாகி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் உபகரணங்களில் இருக்கை போதிய வெப்பம் கிடைக்காமல் பிணங்கள் எரியூட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் தற்போது கொரோனா பெருந்தொற்று நோய் வேகமாக பரவி வருவதால் இறப்பு விகிதமும் அதிகரித்துள்ளது. எனவே உடல்களை எரியூட்டுவதற்கு சிரமமாக உள்ளது. மேலும் தகனமேடையினை பொதுமராமத்து செய்து எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், நீண்டநாட்களாக இயந்திரங்கள் இயங்கிவிட்ட படியாலும் உபகரணங்களை பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி நவீன எரிவாயு தகன மேடை உபகரணங்களை பராமரிப்பு செய்திடும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. தற்போது கொரானா நோய்த்தொற்று காரணமாக அதிகப்படியான இறப்புகள் ஏற்படுவதால் உடல்களை எரியூட்டுவதற்கு சிரமமாக உள்ளதால் அதனை உடனடியாக பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடரலாம்.

**தீர்மான எண் .. 137 அனுமதிக்கப்பட்டது**

**16.** சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் பணிகளுக்காக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டு பணி கிடைக்கப்பெற்று முடிக்கப்பட்டுள்ளது. பணிமுடிவில் வரப்பெற்ற பட்டியல் பிடித்தம் செய்த வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.72816/-ஐ வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்புத்தொகையானது காலம் கடந்த வைப்புத்தொகையாக உள்ளதால் ஒப்பந்ததாரர் திரு.மஞ்சு & CO என்பவருக்கு வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Repair work and pipeline work at 48 colony pumping 1% , 5% | 500/-<br>2449/- |
| 2. | Extension of 140mm PVE Distributor main at Bose Road inW-13 1% /5%. | 1400/-<br>6939/- |
| 3. | Extension of 140mm PVE Distributor main at Rajaji Street at Ward-18. | 1000/-<br>5000/- |
| 4. | Construction of culvert and link road at way of Velunachiyar Memorie Stage. | 8695/- |
| 5. | Providing Bore well with mini power pump at college main road and Kakken East | 12000/- |
| 6. | Providing Bore well with mini Power pump at indiranager wad near ManaMadurai in Plaivanan nerar vaiges temple Ward –No-27. | 18000/- |
| 7. | Pipe line Repair wore at Indiranagar OHT | 300/-<br>1320/- |
| 8. | Construction of of Urinal stall at Gandhi Veethi, Rajogini Street Junction | 2500/-<br>11231/- |

| | | |
|---|---|---|
| 9. | Sintex tank service wire repair work at Thagoor Street and Rajogingi street. | 100/-<br>497/- |
| 10. | Extension at pipe work at Karpura Sundarapanidian HSC School | 150/-<br>735/-<br>72816/- |

**ந.க.எண்896/2020/பி2**

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் ..138 அனுமதிக்கப்பட்டது**

**17.** சிவகங்கை நகராட்சிக்கு சொந்தமான தெற்கு மயானத்தில் உள்ள எரிவாயு தகன மேடையை தகன மேடையை ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணியில் மேற்கொள்ள 07.07.2020ம் தேதியிட்ட தனி அலுவலர் முன்அனுமதயில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 07.08.2020ம் தேதியன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்.சன் பர்னஸ் மதுரை. | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2. | திருவாளர்.குமார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் மதுரை. | 2.92% மதிப்பீட்டு விலை விகித்தை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகதத்தில் வழங்கியுள்ள திருவாளர். சன் பர்னஸ் மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.
2. தற்போது கொரானா நோய்த்தொற்று மற்றும் பிற காரணங்களால் இறப்பு அதிகமாக தொடர்ந்து தகனமேடை இயக்கத்தில் இருக்க வேண்டியுள்ளதால் காலதாமதம் ஆவதைத் தவிர்த்து உடனடியாக பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவெ மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் ஏற்கலாம்.

**தீர்மான எண் ..139 அனுமதிக்கப்பட்டது**

**18.** சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் மேலாளர் அறை, கணக்கர் அறை ஆகியவற்றில் கண்ணாடியிலான கேபின் அமைத்தல், பொறியாளர் அறையில் வர்ணம் அடித்து கதவு அமைத்தல் மற்றும் ஆணையாளர் அறையில் கதவு மாற்றுதல் ஆகிய பணிக்கு ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டிற்கு 16/07/2020ம் தேதியில் தனி அலுவரால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 04.08.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.M.நாட்டசரன், சிவகங்கை | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விடகுறைவு. |
| 2. | திரு.N.ஆனந்த், சிவகங்கை | 0.23% மதிப்பீட்டு விலை விகித்ததை விட அதிகம். |

**அலுவலககுறிப்பு:**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.01% குறைவாக வழங்கிய திரு.நாட்டரசன் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.
2. மேலாளர் மற்றும் கணக்கர் அறைகளின் பாதுகாப்பு நலன் கருதி உடனடியாக கேபின் அமைக்க வேண்டியுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திரு. M.நாட்டசரன் ஒப்பந்தாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் .140. அனுமதிக்கப்பட்டது**

**19.** சிவகங்கை நகராட்சிக்கு சொந்தமான தெற்கு மயானத்தில் பகுதி II திட்டம் 2006–2007ன் கீழ் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி நவீன எரிவாயு தகன மேடையை ஸ்ரீ சக்தி பவுண்டேசன் இராமநாதபுரம் என்ற தொண்டு நிறுவனம் மூலமாக பராமரிப்பு பணிகள் நடைபெற்ற வந்தது. மேற்படி நிருவனத்தின் அனுபோக காலம் முடிவடைந்து விட்டபடியால் மேற்படி தொண்டு நிறுவனத்திறகு வழங்கப்பட்ட உரிமம் 23.07.2020ல் ரத்து செய்யப்பட்டது. மேற்படி நவீன எரிவாயு தகன மேடையை மூன்று வருடத்திற்கு பராமாப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு தொண்டு நிறுவனங்களை தொடர்பு கொள்ளப்பட்டது. இதில் கோட்டைமுத்து நினைவு தொண்டு நிறுவனம் மேற்படி நவீன எரிவாயு தகன மேடையை பராமரிப்புப் பணிகள் செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது.

எனவே சிவகங்கை நகரின் சுற்றுபுர சூழலை கருத்தில் கொண்டும் பொதுமக்களின் நலன் கருதி இமயானத்தை மேற்படி தொண்டு நிறுவனம் மூலம் ஒரு மூன்று வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு உரிமம் வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

1. நவீன எரிவாயு தகன மேடையில் எரியூட்ட பூதஉடல் ஒன்றுக்கு ரூ.2,500/- வீதம் கட்டணத தொகையாக நிர்ணயிக்காலாம். மேற்படி கட்டணத் தொகையினை பராமரிப்பு நிறுவனமான கோட்டைமுத்து நினைவு தொண்டு நிறுவனத்திற்கு செலுத்த கோரலாம். மேலும் ரூ.2,500/- கட்டணத் தொகையில் ரூ.500/- யை நகராட்சி நிர்வாகத்திற்கு செலுத்தக் கோரலாம்.
2. மேற்படி நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. நகர் மன்ற தீர்மான எண்349/நாள்.28.06.2012ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வங்கலாம்.

**(ந.க.எண்.2271/2012/இ1.**

**தீர்மான எண் .141. அனுமதிக்கப்பட்டது**

**20.** சிவகங்கை நகர் பகுதிகளில் அமைந்துள்ள சமுதாயக் கழிவறைகளில் பொது மக்கள் நலன் கருதி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கழிவறைகளை சுவர் விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.75000/- தேவைப்படுவதால் நகரின் பொது சுகாதாரம் நலன் கருதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் ..142 அனுமதிக்கப்பட்டது**

**21.** சிவகங்கை நகர் பகுதிகளில் அமைக்கப்பட்ட சமுதாய கழிவறைகளை சுத்தமாக வைத்துக்கொள்ளவும் பாதுகாப்பாக பார்த்து கொள்ளவும் விழிப்புணர்வு ஏற்படுத்த சுவர் விளம்பரம் செய்ய குறுகிய கால விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ச.அ. அளவுகள் |
|---|---|---|
| 1. | அன்னை கஸ்தூரிபாய் மகளிர் மன்றம் (AKMM) வெள்ளையன் ஊரணி வடக்குதெரு தேவகோட்டை | 1.ச. அடிக்கு ரூ.75/- |
| 2. | வெல்.ஃ.வேர் அசோசியேசன் ரூரல்மாஸ், மாதவன்நகர் திருப்புவனம் புதுார் | 1.ச. அடிக்கு ரூ.65/- |
| 3. | விவேகா அறக்கட்டளை தொண்டியர் தெரு. | 1.ச. அடிக்கு ரூ.59/- |

| | | |
|---|---|---|
| | தேவக்கோட்டை | |

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலை புள்ளியான விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு சுவர் விளம்பரம் உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் ..143 அனுமதிக்கப்பட்டது**

**22.** சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிகளுக்காக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு பணி கிடைக்கப்பெற்று முடிக்கப்பட்டது. பணிமுடிவில் வரப்பெற்ற பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை மற்றும் முன் வைப்புத்தொகை ரூ.2,02,000/- ஐ ஒப்பந்ததாரர் திரு.நேஷனல் கன்ஸ்டக்ரசன் என்பவர் வழங்கக்கோரியுள்ளார். மேற்படி வைப்புத்தொகையானது காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் ஒப்பந்ததாரர் திரு. நேஷனல் கன்ஸ்டக்ரசன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Formation and landscape the Turisiam park masterplan-Complex | 52,500/- |
| 2. | Formation and landscape the Turisiam park masterplan-Complex | 30,000/- |
| 3. | Formation and landscape the Turisiam park masterplan-Complex | 67,000/- |
| 4. | Formation and landscape the Turisiam park masterplan-Complex | 52,500/- |

<u>ரூ. 2,02,000/-</u>

**ந.க.எண்1834/2020/B2**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு வைப்புத் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் 144.. அனுமதிக்கப்பட்டது**

**23.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் 1.06.2020ம் தேதி முதல் காலியாக துப்புரவு பணியாளர் பணியிடத்தை தர ஊதியம் <u>15700 – 50000</u> ரூ.1300 (Level) என்ற ஊதிய விகிதத்தில் நிரப்பி கொள்ளவும் மேற்படி பணியிடத்திற்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மாவட்ட ஆட்சியர் சிவகங்கை நிர்வாக இயக்குநர் எல்காட் நிறுவனம் சென்னை நிர்வாக இயக்குநர் தொழிற்துறை எ∴கு ஆலைநிறுவனம் சேலம் ஆகிய நிறுவனங்களில் காத்திருப்போர் பட்டியல் பெற்றும் நாளிதழில் விளம்பரம் செய்தும் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தை (Sc – General non Priority) நியமான

இன சுழற்சி முறையில் துப்புரவு பணியாளர் பணியிடத்தை நிரப்பிக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவகக்குறிப்பு:**

1. 1.6.2020ம் தேதி முதல் பொது சுகாதார பிரிவில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தை (Sc – General non Priority) நியமான இன சுழற்சி முறையில் பணி நியமனம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்: 961/2020/சி1 நாள்: 24.08.2020**
**தீர்மான எண் .145. அனுமதிக்கப்பட்டது**

**24**. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 15.08.2020 அன்று நடைபெற உள்ள சுதந்திரதினவிழாவிற்கு மாவட்ட ஆட்சியரால் கொடியேற்றும் போது வருகை தரும் அனைத்து துறை அலுவலர்கள், சுதந்திர போராட்ட தியாகிகள், மாற்றுத் திறனாளிகள், பள்ளி மாணவ மாணவிகள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ள தேவையான தகர பந்தல், தென்னங்கீற்று பந்தல், சாமியானா பந்தல், சைடு மறைப்பு, கழிப்பிட வசதி, இருக்கை வசதி, குடிநீர் வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்துகொடுக்க 10.08.2020 அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | N.சந்தான கிருஷ்ணன் | ரூ.85,000/- |
| 2. | S.மணிகண்டன் | ரூ.85,500/- |
| 3. | கணேஷ் சவுண்டு சர்வீஸ் | ரூ.86,000/- |

**அலுவலகக் குறிப்பு:-**

1. உத்தேச செலவு தொகை ரூ.85,000/-க்கு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்ககலாம்.

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. N.சந்தான கிருஷ்ணன் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.இ1/1859/20)**

**தீர்மான எண் .. 146 அனுமதிக்கப்பட்டது**

**25**. இந்நகர் பேருந்துநிலைய அனுமதி வழங்க வட்டார போக்குவரத்து அலுவலர் ஆய்வு செய்ததில் பேருந்து கால அட்டவணை, அம்மா தாய்சேய் கூடம், பேருந்துகள் நிற்கும் ஊர்பெயர் போன்றவைகளை பெயிண்ட் மூலம் எழுத தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலைய அனுமதி பெற மேற்கண்ட பணிகளைச் செய்ய இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தனிஅலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1748/2020/A1 தீர்மான எண் ..147 அனுமதிக்கப்பட்டது**

**26.** இந்நகரப் பேருந்துநிலைய வளாகத்தில் உரிய விவரங்களை பெயிண்டிங் மூலம் சுவர் விளம்பரம் செய்ய 10.08.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வரிசை எண் | விபரம் | ஒரு சதுர அடிக்கு விலைப்புள்ளி |
|---|---|---|
| 1. | S.K.ஸ்டுடியோ&அட்வடைஸ்மெண்ட். பேருந்துநிலையம் எதிர்புறம். சிவகங்கை. | ரூ.145.00 |
| 2. | மாயா ஸ்டுடியோ | ரூ.160.00 |
| 3. | Indian Entertainment, 17/8, அப்துல் ஹமீது தெரு, நேருபஜார். சிவகங்கை. | ரூ.155.00 |

**அலுவலகக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று பணியை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1748/2020/A1**

**தீர்மான எண் ..148 அனுமதிக்கப்பட்டது**

**27.** சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிகளுக்காக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டு பணி கிடைக்கப்பெற்று முடிக்கப்பட்டது. பணிமுடிவில் வரப்பெற்ற பட்டியலில் கண்ட பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.17,150/-ஐ வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்புத்தொகையானது காலம் கடந்த வைப்புத்தொகையாக உள்ளதால் ஒப்பந்ததாரர் திரு.S.முத்துலட்சுமி என்பவருக்கு வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Repair and maintenance to the distribution manitance - | 4200/- |
| 2. | Attending the pumping main Joint leaks by providing concrete work & Idaikattur main work. - | 100/- |

| | | |
|---|---|---|
| 3. | Special repair works to Municipal Council Hall and office building. - | 7500/- |
| 4. | Providing oriental wall Tap girl graniwal tiles for High mass light& Aranmanai vassal for Madurai road. | 1400/- |
| 5. | Special work the water man room ganliwater room and Cylorine well at Idaikattur Head work. - | 3850/- |
| 6. | Replacing the three phase distribution borad in service wire connection at Municipal Office. - | 100/-<br>___________<br>17150/-<br>___________ |

**ந.க.எண்.1833/2020/B2**

**அலுவலகக்குறிப்பு:-** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் ..149 அனுமதிக்கப்பட்டது**

28. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்கண்ட வாகனங்களுக்கு 5/2019 முதல் 5/2020 வரையிலான காலத்திற்குரிய காப்பீடு தொகையினை செலுத்த கோரி United India Company Ltd சிவகங்கை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வாகனம் எண் | | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. TN63B6460 | - | 21184 |
| 2. TN63F9889 | - | 43208 |
| 3. TN63F9891 | - | 43140 |
| 4. TN63B6459 | - | 9746 |
| 5. TN63AC4447 | - | 33054 |
| மொத்தம் | - | 1,50,332 |

எனவே மேற்கண்ட தொகை ரூ.1,50,332/- United Insurance Company Ltd சிவகங்கை நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. வாகனங்களுக்கு காப்பீடு செலுத்தவேண்டியகாலம் முடிவுற்றதால் காப்பீட்டின் அவசர அவசியம்கருதி ஆணையரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்ததை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.2150/2019/எச்1)

**தீர்மான எண் ..150 அனுமதிக்கப்பட்டது**

**29.** திடக்கழிவு மேலாண்மை திட்டம் விதிகள் 2016ன் படி சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை சிப்பமாக கட்டி சிமெண்ட் ஆலைக்கு அனுப்பத்தேவையான Hydraulic Bailing Machine இயக்குவதற்குத் தேயையான மின்சார வேலைகள் மேற்கொண்டதற்கு உரிய செலவுத்தொகை ரூ.12057/-ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.12057/-ஐ Ramu Enterprices நிறுவனத்திற்கு மன்ற முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1501/2020/எச்1) **தீர்மான எண் ..151 அனுமதிக்கப்பட்டது**

**30.** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை 58 பணியாளர்களைக்கொண்டு தனியார் மூலம் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகோரும் அறிவிப்பினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் செய்தித்ததாளில் வெளியீடு செய்ததற்கான செலவுத்தொகை ரூ.70,875/- க்கான செலவுப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்காணும் செலவுத்தொகை ரூ.70,875/-Accord Advertising Agency Chennai. அவர்களுக்கு வழங்கவும், பொது சுகாதாரப்பணியும் அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. ஆணையரின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் 152.. அனுமதிக்கப்பட்டது**

**தனி அலுவலர்**
**சிவகஙகை நகராட்சி**